3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அ. சவுந்தரராசன் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒவ்வொருவராக அழைக்கிறேன்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும், ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் ஏற்கெனவே கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் பேசிகொண்டிருக்கிறார் அல்லவா, உட்காருங்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *தமிழகத்திலே மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் உங்களுக்குள் இப்போது பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். நான் உங்களை முன்பே உட்காரச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நான் உங்களை முன்பே உட்காரச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை; கைநீட்டி உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருப்பது முறையில்லை. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, இது முறையா? நான் முன்பே உங்களை உட்காரச் சொல்லிவிட்டேன். நீங்கள் தாங்களாகவே எழுந்துநின்று தனியாகப் பேசிக்கொண்டிருப்பது முறையில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள், நான் உங்களை அழைக்கிறேன் என்று சொன்னேன் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களை அழைக்கிறேன் என்று சொல்கிறேன், நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு மதுவிலக்கை அமல்படுத்தப்பட வேண்டிய அவசியம் மிகத் தீவிரப்பட்டிருக்கிறது. மக்களுடைய உணர்வை அரசாங்கம் கணக்கில்கொண்டு*

2015 ஆகஸ்ட் 25] [திரு. அ. சவுந்தரராசன்]

மதுவிலக்கை அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கிறேன், வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். ஆறுமுகம் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சியின் சார்பில் ஒருவரைத்தான் அழைக்கமுடியும். எல்லோரும் Zero hour-ல் எழுந்து எப்படிக் கேட்க முடியும், சொல்லுங்கள்? திரு. எம். ஆறுமுகம், சொல்லுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 172—ன்கீழ், தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் மதுக் கடைகளினால் மது அருந்தும் பழக்கம் அதிகரித்து வருவதாலும், மதுக் கடைகள், மருத்துவமனைகள், கல்லூரிகள், பள்ளி வளாகங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. திரு. எம். ஆறுமுகம், நீங்கள் ஒரு அறிவிப்புக் கொடுத்தீர்கள், அதற்கு உங்களுக்கு நான் பதில் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) அனுமதியில்லை, நீங்கள் ஓர் அறிவிப்புக் கொடுத்தீர்கள், உங்களுக்கு நான் பதில் கொடுத்துவிட்டேன். அதையெல்லாம், நீங்கள் அவையில் எழுப்ப முடியாது; உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நீங்கள் அவையில் எழுப்ப முடியாது; உட்காருங்கள். (குறுக்கீடு) அதையெல்லாம், என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். நீங்கள் கொடுத்த அறிவிப்புக்கு, நான் பதில் சொல்லிவிட்டேன்; உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, உட்காருங்கள். முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55—ன்கீழ், தமிழகத்தில் முழுமையான மதுவிலக்கு அமல்படுத்த வேண்டுமென்ற ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அதை எடுத்துக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நீங்கள் உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள்.

[2015 ஆகஸ்ட் 25

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென நான் ஒரு தனி நபர் தீர்மானத்தைக் கொடுத்துள்ளேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு நான் உங்களுக்கு பதில் கொடுத்துவிட்டேன்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *அதற்கு நீங்கள் அனுமதி மறுத்திருக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அறிவிப்புக் கொடுத்தீர்கள். அதற்கு, நான் உங்களுக்குப் பதில் கொடுத்துவிட்டேன். நீங்கள் அதன்மீது மேற்கொண்டு பேசவேண்டுமென்றால், இங்கே அவையில் எழுப்ப முடியாது. நீங்கள், என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். அதற்கு நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். திருமதி எஸ். விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அனுமதி இல்லை. (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன், உட்காருங்கள்.*

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கோரி வெகுஜன போராட்டங்கள் வெடித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், ஒரு தனி நபர் மசோதாவாக, தமிழ்நாடு மதுவிலக்கு மற்றும் மதுவினால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. அதுவெல்லாம் என் ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) அதுவெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் எழுப்ப முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. என்.ஆர். ரெங்கராஜன், உட்காருங்கள். அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்ததெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள். அப்புறம் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவையிலிருந்து வெளியேறினார்.)

2015 ஆகஸ்ட் 25] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 12–10

நீங்கள் கொடுத்த அறிவிப்புகளுக்கெல்லாம் பதில் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் பதில் கொடுத்துவிட்டேன், பிறகு பேசிக்கொள்ளலாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புக் கொடுத்தேன் நீங்கள் raise செய்தீர்கள், அது பதிவாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பதிலை உடனே எதிர்பார்க்கக் கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் பேச வாய்ப்புக் கேட்டீர்கள். நானும் கொடுத்தேன். (குறுக்கீடுகள்) அனைத்து உறுப்பினர்களும் இப்படி ஒரே நேரத்தில் எழுந்து பேசினால் எப்படி? நான் எப்படி பதில் சொல்வது? (குறுக்கீடுகள்) நீங்கள் பேச வேண்டுமென்று கேட்டீர்கள், நான் வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சில கோரிக்கைகளை முன்னிறுத்தி மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்குக் கடிதம் கொடுத்திருந்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதற்குரிய பதிலையும் சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் வழங்கியிருக்கின்றார்கள். அதையே நீங்கள் பதிலாக எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் என்னை அப்படியெல்லாம் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் raise செய்தீர்கள், பதிவு செய்துகொண்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்கின்ற பொருளுக்கு, அறிவிப்புக் கொடுத்தவர்களுக்கு நான் தனியாகப் பதில் அளித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) மற்றபடி நீங்கள் விதி 55–ல் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தில் பேசும்போது, அதுபற்றியெல்லாம் தாராளமாகப் பேசலாம். (குறுக்கீடுகள்) உங்களுக்கு அப்போது வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்) இப்போது தனியாக raise செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) சட்டப் பேரவையில் தற்போது நிதி மசோதா ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன.*

(குறுக்கீடுகள்) தற்போது நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் அனுமதி கொடுக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது பேசுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதற்கெல்லாம் நான் பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குத் தனியாகவும் பதில் அனுப்பிவிட்டேன், இப்போதும் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது இதுபற்றிப் பேசலாம். தற்போது தனியாகப் பேசுவதற்கு வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுவெல்லாம் அவசரப் பொது முக்கியத்துவம் இல்லை. மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் மனித நேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

5. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநீதியை வென்று நீதியை நிலைநாட்டிய எங்கள் நீதி தேவதையே! தமிழக மக்களுக்கு நாடு போற்றும் நான்காண்டு சாதனைத் திட்டங்களைத் தந்த சாதனைத் தலைவியே! தமிழகத்தின் தீய சக்திகளை ஒழிக்கப் பிறந்த மகா சக்தியே! தமிழக மக்களின் அன்புத் தாயே! எங்களை வாழவைக்க இறைவன் தந்த இதய தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–2015 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 142 முதல் 157

சட்டமன்ற பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS